**வீதித்துறை உதவிச் செயற்திட்டம் - 2019**

வீதித்துறை உதவிச் செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2006 சனவரி 16 ஆந் திகதிய 4138−சீஈ ஆம் இலக்க அபிவிருத்தி கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.01 (பீ)(i) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

அபிவிருத்திக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சான தற்போதைய நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. வினைத்திறனான தேசிய வீதி முறைமையின் நிலைத்துநிற்கவல்ல விநியோகத்தின் ஊடாக போக்குவரத்துச் செலவுகளைக் குறைப்பது செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. ஆரம்ப அபிவிருத்தி கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 10,125 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 69.10 மில்லியன் (ஐ.அ.டொலர் 100 மில்லியன்) ஆக உள்ளதுடன் முழுத் தொகையும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மேலும், 2008 யூன் 23 ஆந் திகதிய முதலாவது குறைநிரப்பு அபிவிருத்திக் கடன் உடன்படிக்கையின் கீழ் ரூபா 11,579 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 59.60 மில்லியன் (ஐ.அ.டொலர் 98.1 மில்லியன்) ஆன மேலதிக ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. 2011 மார்ச் 15 இல் இரண்டாவது குறைநிரப்பு அபிவிருத்திக் கடன் உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருந்ததுடன் அதன் மீது ரூபா 11,081 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 63.6 மில்லியன் (ஐ.அ.டொலர் 100 மில்லியன்) ஆன மேலதிக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆரம்பத்தில், செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2006 சனவரி 16 இல் தொடங்கியிருந்ததுடன் 2011 மார்ச் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. மேலும், செயற்திட்டக் காலமானது 2015 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்த்தின் செயற்பாடுகள் தொடரப்பட்டிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2 ஆம் அட்டவனையில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.4 முனைப்பழி அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை

வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். கருத்திட்டத்தினை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

கருத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ்

கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| செயற்திட்டத்தினால் செய்யப்பட்ட தேசிய, மாகாண மற்றும் கிராமிய வீதியின் புனரமைப்பு மற்றும் மறுசீரமைப்பு வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டு செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முடிவுறுத்தப்பட்டிருப்பினும், செயற்திட்டத்தின் செயற்பாடுகளை மூடுவதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் அமுல்படுத்தல் முகவரினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், காலி – தெனியாய வீதியின் புனரமைப்பு வேலைகள் மீது ஒப்பந்ததாரரினால் செய்யப்பட்ட ரூபா 67.69 மில்லியன் கொடுப்பனவுகளின் தீர்பனவுகள் மீதான பிணக்குகள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட தீர்க்கப்படாமல் மீதமாக காணப்பட்டது. | கணக்கீட்டு கொள்கைகளின் தவறான பயன்பாடு. | சரியான தொகை இன்னும் உறுதிப்படுத்தப்படாத தீர்க்கப்படாத பிணக்குகளின் பொறுப்புக்களை காட்டும் முடிவுறுத்தல் கணக்குகளை தயாரிக்க ஒரு மாத காலத்தினுள் நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திட்ட கண்காணிப்பு பிரிவின் செயற்பாடுகளை முடிவுறுத்தவும் அதனடிப்படையிலான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. பௌதீக முன்னேற்றம்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 08 மாகாணங்களிலுள்ள தேசிய வீதிகளின் 620 கி.மீகள் மற்றும் 03 மாகாண சபைகள் மற்றும் 09 பிரதேச சபைகளின் கண்காணிப்பின் கீழுள்ள மாகாண மற்றும் கிராமிய வீதிகளின் 635 கி.மீகள் போன்றவற்றின் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகள் செயற்திட்டத்தினால் அமுல்படுத்த எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இருப்பினும், தேசிய வீதிகளின் 685 கி.மீ மற்றும் மாகாண மற்றும் கிராமிய வீதிகளின் 162 கி.மீ போன்றவற்றின் புனரமைப்பு வேலைகள் 2015 ஜுன் 30 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. மாகாண மற்றும் கிராமிய வீதிகளின் 473 கி.மீகள் பூர்த்திசெய்யப்பட்டிராததுடன் ஒரு வருடத்திற்கு மேலான தாமதத்துடனான 11 வீதிகளின் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளும் அதேவேளை 200 நாட்களிற்கு மேலான தாமதத்துடனான ஏனைய 05 வீதிகளின் புனரமைப்புக்கள் என்பன பூர்த்திசெய்யப்பட்டிருந்தமை

அவதானிக்கப்பட்டது. மேலும் சொல்லப்பட்ட வீதிகளின் புனரமைப்பு வேலைகளின் மதிப்பிடப்பட்ட கிரயங்கள் மொத்தமாக ரூபா 14,816 மில்லியன் வேலைப்பரப்பு மாற்றம், மாறல்கள் மற்றும் மேலதிக வேலைகள் காரணமாக வேலை செய்யும் நேரத்தில் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 48.92 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 22,065 மில்லியன் வரை அதிகரித்திருந்தது.

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | மொத்தமாக ரூபா 733.87 மில்லியன் காலநீடிப்பு மற்றும் நீடிப்பு, விரைவுபடுத்தல் மற்றும் ஏனைய நோக்கங்களின் மீது ஏற்பட்ட கிரயங்கள் போன்றவற்றிற்காக இங்கிரிய – ரத்னபுரி வீதியின் ஒப்பந்ததாரரினால் அறவிடப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, வட்டிக்காக மொத்தமாக ரூபா 903.1 மில்லியன் ஒப்பந்ததாரரினால் பெறப்பட்டிருந்தது. கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், உரிய ஒப்பந்ததாரரிற்கு வீஏடி(VAT) 15 சதவீதம் உள்ளடங்களாக மொத்தமாக ரூபா 1,150 மில்லியனை செலுத்தவும் நட்டத்திற்கு பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து உரிய தொகையினை மீட்பதுடன் தொடர்புபட்ட கொடுப்பனவுகளை தீர்கவும் அமைச்சரவை அமைச்சர்களினால் 2019 ஒக்டோபர் 16 இல் இடம்பெற்ற அவர்களது கூட்டத்தில் தீர்மானித்திருந்தனர். அதன்படி, மேலதிக கிரயங்களிற்கு பொறுப்பான தரப்பினரை விசாரிக்கவும் எதிர்கால செயற்திட்டத்தில் இவ்வாறான மேலதிக கிரயங்களை தவிர்ப்பதற்கு ஒரு தந்திரோபாயத்தை நிறுவவும் நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி | மேலதிக கிரயங்கள் ஏற்பட்டன. | வரையறுத்த வக்கசிக்கு நிர்மான கம்பனிக்கான இறுதி கொடுப்பனவு 15% வீஏடி(VAT) (1,150மில்லியன்) உள்ளடங்களாக ரூபா 1,000 மில்லியன் 2019 ஒக்டோபர் 31 இல் செய்யப்பட்டிருந்ததுடன் அதே திகதியில் வெளியேறுவதற்கான கடிதமும் நாங்கள் பெற்றிருந்தோம். 2019.10.09 ஆம் திகதிய 192683/119/095 ஆம் இல அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், எம்ஓஎச்ஆர்டி (MoHRD), டிஜி(DG), ஆர்டிஏ வின் அறிவுறுத்தலின் மீது மேலதிக கிரயங்களிற்கு பொறுப்பான தரப்பினரை விசாரணை செய்யவும் எதிர்கால செயற்திட்டங்களில் அவ்வாறான கிரயங்களை குறைப்பதற்கான தந்திரோபாயத்தினை நிறுவவும் ஒரு குழு நியமிக்கப்பட்டது. | மேலதிக கிரயங்களிற்கு பொறுப்பான தரப்பினர்கள் மற்றும் காரணங்களை விசாரிப்பதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான கிரயங்களை தவிர்க்க தந்திரோபாயங்களையும் நிறுவுக. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பானர் நாயகத்தினால் ஒரு குழு நியமிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், நட்டத்திற்கு பொறுப்பான தரப்பினரை விசாரிப்பதற்கான செயன்முறை கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஆ) | காலி – தெனியாய வீதியின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் மீதான கொடுப்பனவுகளின் மீதான பிணக்குகள் 2010 இல் எழுந்தது. இணக்க தீர்ப்பனவு குழு ஒப்பந்ததாரருடன் கலந்துரையாடி முடிவு செய்ய வரிசை அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்டிருந்ததுடன் கொடுப்பனவுகளை தீர்ப்பதற்கான ரூபா 67.69 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 858,017.28 இனை கொடுப்பனவு செய்ய பரிந்துரைத்துமிருந்தனர். அமைச்சரபையிடமிருந்தான அனுமதியினை பெறுவதில் தாமதத்தின் பெறுபேறாக, இவர்கள் நடுவர் தீர்ப்புடன் திட்டமிட்டு நடைமுறைபடுத்தினர் என ஒப்பந்ததாரரின் சட்ட ஆலோசகர் அறிவித்திருந்தார். இருப்பினும், உரிமை கோரியவரினால் கூறப்பட்ட பிரச்சனைக்குரிய ரூபா 1,897 மில்லியன் தொகை 2020 ஜுலை 31 வரை நியாயமான தொகைக்கு கூட கலந்தாலோசித்து முடிவெடுக்கப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்ததாரரின் பொறுப்புக்கள் இணக்கபூர்வமான கொடுப்பனவுகளை அடையாமல் இன்னும் காணப்பட்டது. | மேலதிக கிரயங்கள் ஏற்படுவதற்கான சாத்தியம். | இக் கொடுப்பனவுகளை செய்வதற்கு எவ்வித டபல்யூபீ(WB) நிதிகள் காணப்படாததனாலும் ஜீஓஎஸ்எல்(GOSL) நிதி தீர்ப்பனவுகளிற்காக பயன்படுத்த வேணண்டியிருந்ததனாலும், அமைச்சானது நிதி அமைச்சிலிருந்தான பிரதிநிதியுடன் ஒரு குழுவினை நியமிக்க நடவடிக்கை எடுத்திருந்தது. | நட்டத்தினை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |